பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

UTHAYAN

சுடர்: 5 பிரமோதூத ஹூ கார்த்திகை மீ 03 உ திங்கட்கிழமை (19 11 1990) ஹிஜ்ரி 1410 ற. ஆகிர் 9 கதிர் 257

# கிழக்கு வாழ் தமிழ் மக்களுக்கு மாவீரர் வாரத்தில் உதவுக!

## மாத்தயா வேண்டுகோள்

யாழ்ப்பாணம், நவம்பர் 19

சொல்லொணா துன்பங்களில் சிக்கித் தவிக்கும் கிழக்குத் தமிழ் மக்களுக்கு மாவீரர் வாரத்தில் உதவுமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராஜா (மாத்தயா) தமிழ் மக்களை வேண்டியிருக்கிறார்.

அண்மையில் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் தாம் மேற்கொண்ட விஜயம் குறித்து "விடுதலைப் புலிகள்" பத்திரிகையில் அவர் வெளியிட்ட செய்தியிலேயே இந்த அழைப்பை விடுத்திருக்கிறார்.

அந்தச் செய்தியின் ஒரு பகுதி வருமாறு:-

எங்கள் உடன் பிறப்புக்கள் கிழக்கில் படும் வேதனைகளும் இன்னல்களும் கொஞ்சநஞ்சமல்ல.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்று வந்த கப்பலில் அதிகளவு தபால்கள் வந்தன

'விங்கோ றேட்ஸ்' கப்பல் நேற்று மாலை பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தது.

இந்தக் கப்பலில் உணவுப் பொருள்களுடன் மருந்து வகைகள், பெருமளவிலான தபால் பொதிகள், யாழ் போதனா ஆஸ்பத்திரி ஜெனரேட்டருக்குத் தேவையான டீசல் ஆகியவையும் வந்துள்ளன.

தபால் பொதிகளில் பெரும்பாலானவை பதிவுத்தபால்கள் ஆகும்.

தபால் பொதிகள் மற்றும் அவசரமாக விநியோகிக்க வேண்டிய சில முக்கிய பொருள்கள் இன்று இறக்கப்படும்.

அதன் பின்னர் கப்பல் முல்லைத்தீவு நோக்கி புறப்படும் அங்கு அம்மாவட்டத்திற்குரிய பொருள்கள் இறக்கப்படும்.

அதைத் தொடர்ந்து கப்பல் மீண்டும் பருத்தித்துறைக்கு வந்து மிகுதிப் பொருள்களை இறக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஓ-3)

## வ.பி.போ. சபை பிரச்சினை: கொழும்பு சென்றது குழு!

யாழ்ப்பாணம், நவ: 19

வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களின் சம்பளப் பிரச்சினை குறித்து பேச்சு நடத்துவதற்காக தூதுக்குழு ஒன்று கொழும்பு சென்றுள்ளது.

பதில் பொது முகாமையாளர் தலைமையில் சென்றுள்ள பிரஸ்தாப குழுவினர், மத்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் மற்றும் அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவர்.

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் இருந்து வ. பி. போ சபை ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(ஓ-3)

## பலாலிக்கு அடுத்தடுத்து விமானங்கள் வந்து போயின

யாழ்ப்பாணம், நவ 19

பலாலிக்கு நேற்று அடுத்தடுத்து விமானங்கள் வந்து. போய்க்கொண்டிருந்தன.

சினச் சகடை விமானங்களும் நேற்று லாலி விமான நிலையத்தில தரையிறங்கிச் சென்றதாகக் கூறப்பட்டது.

விமானங்கள் அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்ததால், அப்பகுதியில் ஹெலிகள் வட்டமிட்டு, பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்தன.

இதேவேளை—

நேற்று முன்தினம் காரைநகருக்கும் பலாலிக்கும் இடையில் ஹெலிகள் பலதடவைகள் பறந்தபடி இருந்தன.

(ஓ-3)

## கொழும்பில் தமிழர் கைது

கொழும்பில் மீண்டும் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுகிறார்கள்,

அப்படி கைது செய்யப்படுபவர்கள் பின்னர் பணம் பெற்றுக்கொண்டு விடுவிக்கப்பட்டு விடுகின்றனராம்

செட்டித்தெருவில் இப்படிச் சம்பவங்கள் அடிக்கடி நடந்து வருவதாக நேற்று யாழ். வந்த ஒருவர் தெரிவித்தார்.

(ஓ-6)

## பயிலுநர் ஆசிரியருக்கும் அலவன்ஸ்!

எரிபொருள் விலை உயர்வை அடுத்து அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட மேலதிக அலவன்ஸ், பயிலுநர் ஆசிரியர்களுக்கும் வழங்கப்படும்.

கல்வி அமைச்சு இதுகுறித்து அறிவித்துள்ளது.

(ஓ-8)

## இந்தியா செல்லத் தமிழருக்கு விசா; கெடுபிடிகளை தளர்த்தக் கோரிக்கை

### சந்திரசேகரிடம் அன்பரசு

புதுடில்லி, நவ: 19

இலங்கைத் தமிழர்கள் பாரதத்துக்கு விஜயம் செய்வதற்கு விசா வழங்குவதில் கொழும்பில் உள்ள இந்திய தூதரகம் பல கட்டுப்பாடுகளை விதித்து கெடுபிடிகளை செய்துவருகிறது.

வி.பி. சிங் அரசினால் விதிக்கப்பட்ட சடுமையான நிபந்தனைகளை அடுத்தே கொழும்பு தூதரகம் கெடுபிடி சாட்டி வருகிறது.

இந்த கடுமையான நிபந்தனைகளைத் தளர்த்துமாறு புதிய பிரதமர் சந்திரசேகரிடம் காங்கிரஸ் நாடாளுமன்றக் குழுவின் செயலாளர் இரா. அன்பரசு வலியுறுத்திக் கேட்டுள்ளார்.

இலங்கை இராணுவத்தினருடன் இணைந்திருக்கும் தமிழ்ப் போராளிகளுக்குப் புதுடில்லியில் புகலிடம் வழங்ககூடாது என்றும் திரு. அன்பரசு கோரியுள்ளார்.

(ஓ-3)

## அருள் - 89 தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ 19

கடந்த வெள்ளியன்று திருகோணமலை மாவட்டம் திரியாயில் உள்ள இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் 'அருள் 89' ஷெல் கொண்டுதாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஷெல் முகாமுக்குள் விழுந்து வெடித்ததாகவும்—

அதனால்படையினருக்குஏற்பட்டசேதவிவரங்கள் தெரியவரவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

(உ)

## திரியாயில் கடும் மோதல்; கப்டன் வாசு வீரமரணம்

கடந்த சனியன்று காலை 10 மணியளவில் திருகோணமலை மாவட்டம் திரியாய்ப் பகுதியில் விடுதலைப் புலிகளை இராணுவத்தினர் சுற்றிவளைக்க முற்பட்டபோது இரு தரப்பினருக்கும் இடையில் சுமார் 30 நிமிடநேரம் கடும் மோதல் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் பேராளியான கப்டன் வாசு (சாம்பல் தீவு) வீரமரணமடைந்தார்.

இந்தச் சண்டையில் படையினருக்கு ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து தகவல் கிடைக்கவில்லை.

(உ)

## ஒரு மாத நிவாரணம் பற்றி இன்று செயலகத்தில் கூட்டம்

யாழ் : மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட சகலருக்கும் ஒரு மாத காலத்துக்கு- வாராவாரம் வழங்கப்பட இருக்கும் உலர் உணவு நிவாரண விநியோகம் குறித்து இன்று காலை 10 மணிக்கு செயலகத்தில் விளக்கக் கூட்டம் ஒன்று நடைபெற இருக்கிறது.

எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் அமுல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த நிவாரணத் திட்டம் குறித்து இன்று நடைபெறும் திணைக்கள அதிகாரிகள், உதவி அரச அதிபர்கள் ஆகியோர் கலந்து கொள்ளும் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட இருக்கிறது.

இதே வேளை—

இந்த ஒரு மாத கால நிவாரணக் கொடுப்பனவு முடிவடைந்த பின்னர் இடம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்புக்கு கொள்கலன்களில் பெருமளவில் நவீன ஆயுதங்கள்!

கொழும்பு, நவம்பர் 19

அரசாங்கம் பெருவாரியான நவீன ஆயுதங்களையும், இராணுவத் தளபாடங்களையும் வாங்கியுள்ளது.

அவை கடந்த வாரம் கொழும்புத் துறைமுகத்தில் கொண்டு வந்து இறக்கப்பட்டன.

கப்பல்களில் பெரும் எண்ணிக்கையான கொள்கலன்களில் [illegible] தங்கள் பலத்த [illegible] இராணுவத்தின் கேந்திர நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

அதற்காக கடந்த வாரம் நகரின் பல வீதிகள் போக்குவரத்துக்கு மூடப்பட்டிருந்தன. எங்கும் தீவிர பந்தோபஸ்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. ஆயுதம் தாங்கிய படையினர் தீவிர ரோந்து மற்றும் காவல் பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த வகையில் கடந்த புதன்கிழமை [illegible] பல மணி நேரம் போக்குவரத்துக்கு மூடப்பட்டிருந்தது.

(அ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஜேர்மன் செப்பேட் அல்செசன் ஆண் குட்டிகள், பூச்சி அகற்றப்பட்ட நிலையில் உள்ளது. வயது ஏழு கிழமை. தொடர்பு:- சேவியர்; 219, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (14791)

நத்தார், புதுவருட வாழ்த்துக்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விஷேட கழிவுண்டு) "மண்டேலா ரேடர்" இல. 258A, பருத்தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். (14550)

### வாங்கலாம், விற்கலாம்

நாள்தோறும் திறந்திருக்கும். பழைய புத்தகங்கள் வாங்கப்படும், விற்கப்படும். சேனாதிராசா Second Hand Book House, 18/6, ஸ்ரான்லி றோட், இலங்கை வங்கி முன் லேன், யாழ்ப்பாணம். (14720)

### FUDO

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் - விற்கவும், சிறந்த முறையில் திருத்தவும் FUDO, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் (மணிக்கூட்டு?) பிரதான வீதி, மானிப்பாய். (C/5398)

### வழமையான சேவை

மூன்று மொழிகளிலும் றபர் ஸீல், பிளாஸ்டிக் போட், விளம்பர போட் யாவும் செய்து கொள்ள "வீமா" 104, ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம். தினசரி காலை 9 மணி முதல் பி. ப. 1.00 மணிவரை சேவை செய்கின்றது. [14754]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அப்பாக்குட்டி
இராசையா
மலர்வு: 11-3-1911 உதிர்வு: 20-10-1990

எங்களை நல்வழி காட்டி வாழ வைத்த அன்புத் தந்தையே! தங்களை நன்றியுடன் நினைவு கூர்ந்து ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால்
துயருறும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

சரவணை மேற்கு,
வேலணை.

(14795)

### முறிவு தறிவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் செல்லத்துரை பரம்பரை முறிவு தறிவு நோவு வைத்தியம் தற்சமயம் சண்டிலிப்பாய் வீதி பண்டத்தரிப்பில் இயங்கிவருகிறது. விரைவில் யாழ்ப்பாணத்தில் மீண்டும் வைத்தியசாலை திறக்கப்படவுள்ளது. (14773)

### "இருள் இரவில் அல்ல"

மீரா வெளியீடு 'முடிவல்ல ஆரம்பம்' நாவலாசிரியர் சிதம்பர திருச்செந்திநாதன் எழுதியது (146 பக்கங்கள்) 45/-ரூபா புதிய அனுபவத்தினை தருகிறது. இந்நாவல் துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னாகம், திருக்கணிதம் சாவகச்சேரி ஸ்ரீகாந், புத்தகசாலை நல்லூர், (14803)

### EASY ENGLISH

இலகுவாக O/L, A/L மாணவர்கள் ஆங்கிலம் கற்பதற்கு உகந்த முறையில் எழுதப்பட்ட கைநூல் 'Easy English' 60/- ரூபா விற்பனையாகிறது. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னாகம், திருக்கணிதம் சாவகச்சேரி, ஸ்ரீகாந் புத்தகசாலை நல்லூர். (1480)

### நியூ லிக்ரேஸ்

மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணத்திலுள்ள மேற்படி ஸ்தாபனம் மீண்டும் வழமையாக இயங்கிக்கொண்டு இருப்பதனால், திருத்துவதற்கு கொடுக்கப்பட்ட உங்களின் பொருள்களை காலை 8 30 தொடக்கம் பி.பகல் 1.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம். (சி/5430)

### மூக்குப் பொடி

மிகத்தரமான காரம், மணம், குணம் நிறைந்த மூக்குபொடி சாதாரண வாசனையூட்டிய வகைகளில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். விலாசம்:- V.K.தேவகுருநாதன் 142, ஆடியபாத றோட், (கல்வியங்காடு சந்தையில் இருந்து 75 யார் தூரத்தில் உள்ளது.) யாழ்ப்பாணம். (14792)

### மொழி பெயர்ப்பாளர் எழுத்தாளர் தேவை

ஆங்கில தமிழ் மொழி பெயர்ப்பாளர்களும் எழுத்துத்துறை அனுபவமுள்ளவரும் உடன் தேவை. அனுபவம் தகைமை வயது குறித்து விவரமாக எழுதவும் விவரம் இலக்கம் 155, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (14793)

### மணமகள் தேவை

பிரித்தானிய அரசாங்கத்தில் 14 வருடங்களாக உயர் பதவி வகிப்பவரும் பிரித்தானிய பிரஜையும், உயரிய குணமிக்க விரைவில் இலங்கை வரஇருப்பவருமான 39 வயது 5'4'' உயரமுடைய கண்ணியமான கத்தோலிக்க (R.C) சகோதரனுக்கு படித்த பண்புள்ள நற்குணமுள்ள ஆங்கிலம் பேசத்தக்க மணமகளைத் தேடுகின்றார், விரும்புவோர் முழுப்படத்துடன் சகலவிபரங்களுடன் விண்ணப்பிக்கவும் C/o, 154, உதயன், யாழ்ப்பாணம். (14721)

## ஷெல்லினால் சேதம்

காங்கேசன்துறை, நவ. 19
வலி. வடக்கில் தொடர்ந்து இடம்பெற்று வரும் ஷெல் தாக்குதலால் பெரும் சேதங்கள் ஏற்பட்டு வருகின்றன. ( -68)

## University of Jaffna, Faculty of Agriculture, Kilinochchi

Applications will be received by me from suitable candidates for the following post upto 1990-11-27.

Temp. Demonstrator in Animal-Science

Salary Scale:

Temp. Demonstrator: 3,250/- p.m. (Fixed)

Qualifications
Temporary-Demonstrator

A graduate or person awaiting results of a Final / Degree-Examination.

Applicants are requested to apply together with their Bio-datas. Qualified applicants are also requested to present for an interview scheduled to be held on 1990-11-28 at 10.00 a.m. in the Board Room of this University.

– REGISTRAR.
University of Jaffna,
Thirunelvely,
Jaffna.
1990-11-15.

[C-5441]

## தேவை

Hand Feeding - Baby Cylinder
அச்சு இயந்திரம் தேவை

பாவனைக்கு உகந்த நிலையில் உள்ள இயந்திரத்தை விற்பனைக்கு வைத்திருப்போர் உடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

முகாமையாளர்.

உதயன் வெளியீட்டகம்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்

திருமதி
கனகரெத்தினம் ராசம்மா

தோற்றம்: 06 - 08 - 1926 மறைவு: 23 - 08 - 1990

எங்கள் அருமைத் தாயே! எங்களை எல்லாம் அன்புடனும், நேர்மையுடனும், பாசத்துடனும் நல்வழிகாட்டி வளர்த்து கண்ணை இமை காப்பது போல் காத்து, உங்கள் புன்னகை தவழும் இன் முகத்தை எப்படி மறப்போமோ வாழ்வில் எந்நாளும்!

அன்னாரின் அந்தியேட்டி நிகழ்ச்சி 20 - 11 - 90 செவ்வாய்க்கிழமை பகல் அவரது இல்லத்தில் நடைபெறும். அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

உமது பிரிவால் வாடும்:
கணவன், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

குருசுமடவடி,
ஆனைக்கோட்டை.

[14808]

## தென்னிந்திய திருச்சபை - யாழ் ஆதீனம் குடும்பத் தலைவரை இழந்த விதவைகளுக்கான நிவாரணம்

(11-06-1990 இற்குப் பின்னர் யுத்த காரணத்தால் பாதிக்கப்பட்டோருக்கு மட்டும்)

மேற்படி நிவாரணம் சம்பந்தமாக விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. பாதிப்படைந்த மனைவிமார் 21-11-90 தொடக்கம் 27-11-90 வரை தங்கள் விண்ணப்பங்களை பின்வரும் இடங்களில், பின்வரும் ஆவணங்களுடன் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

ஆவணங்கள்:-

1. இறப்புச் சாட்சிப் பத்திரம்
2. விண்ணப்பதாரியின் விவாகச்சாட்சிப் பத்திரம்
3. பிள்ளைகள் பற்றிய விவரங்கள்
4. விண்ணப்பதாரியின் அடையாள அட்டை
5. மேற் கூறியவற்றை உறுதிப்படுத்தும் கிராம சேவகர், உதவி அரசாங்க அதிபர் மற்றும் பொறுப்பு வாய்ந்தோரின் பத்திரம்

பதிவு செய்யும் இடங்கள்:-

1. ஆதீன காரியாலயம்,
தென்னிந்திய திருச்சபை, வட்டுக்கோட்டை.
2. திருமறை இல்லம்,
(அமெரிக்கன் மிஷன் அச்சகம்),
162, 1ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
3. கிறிஸ்து அரசர் ஆலயம்,
தென்னிந்திய திருச்சபை, கிளிநொச்சி.
4. பரி. யோவான் ஆலயம்,
ஊரணி, மட்டக்களப்பு.

ஆதீன காரியாலயம்,
வட்டுக்கோட்டை.

(14796)

## மரண அறிவித்தல்

சபாபதிப்பிள்ளை
இராசரெத்தினம்
(வித்துவான் - இளைப்பாறிய ஆசிரியர்)

வேலணையூர் வித்துவான் சபாபதிப்பிள்ளை இராசரெத்தினம் அவர்கள் காலமானார்.

இவர் ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும், சிந்தாதேவி [ஆசிரியை யாழ் கன்னியர் மடம் மகாவித்தியாலயம்], மனோகரன் [லண்டன்], தாமரைச்செல்வி [ஆயுள்வேத டாக்டர் கைதடி], கணைவேந்தன் [ஜேர்மனி], எழில் இளங்கதிர் [வேலைப் பரிசோதகர் கச்சேரி கிளிநொச்சி], ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வசோதி [முன்னாள் முகாமையாளர் ரியோ குறூப் ஒவ் கம்பனி], மனோரஞ்சிதம் [லண்டன்], சேவியர் [ஆசிரியர் புனித மரியாள் வித்தியாலயம் யாழ்ப்பாணம், முன்னாள் முரசொலி காரியாலயம்], வனிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், நிரோஜா, ரம்யா, சிந்துஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் திங்கட்கிழமை காலை 10 மணியளவில் (19-11-90) 253/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாண இல்லத்தில் நடைபெற்றுத் துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
எழில் இளங்கதிர் (மகன்)

[14802]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### இலங்கையில் பலஸ்தீனம்

திருகோணமலை மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றங்கள் தீவிரமாக நடைபெற்று வருவதாக நாளாந்தம் செய்திகள் கிடைத்தவண்ணம் உள்ளன. அரசாங்கத்தின் நூறுவீத அனுசரணையுடன், ஆயுதப் படையினரின் முழுப் பாதுகாப்புடனும் சிங்கள-பௌத்த தீவிரவாதிகள் இக்குடியேற்றங்களைத் திட்டமிட்டு நடத்திவருகின்றனர். அவற்றுக்கும் மேலதிகமாக, மீளக்குடியமர்த்தல், வீடமைப்புத் திட்டங்கள், அரச ஊழியர் குடியிருப்புகள் மற்றும் அபிவிருத்தித்திட்டங்கள் என்ற போர்வையில் அரசாங்கமும் அங்கு சிங்களவர்களைக் குடியேற்றி வருகிறது.

அரச பயங்கரவாதத்தின் உதவியோடு தமிழர்களை விரட்டி அடித்து விட்டு, அவர்களின் பரம்பரைக் காணிகளில் எல்லாம் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டு வருகிறார்கள்.

சிவில் நிர்வாகத்தை அமுல்நடத்துவதாகக் கூறித் தமிழர்களின் வீடுகள், பாடசாலைகள் ஆலயங்கள் தரைமட்டமாக்கப்படுகின்றன. பின்னர் அபிவிருத்தி வேலைகள், திணைக்கள ஊழியருக்குக் குடியிருப்பு என்ற போர்வையில் சிங்களவர் குடியேற்றப்படுகிறார்கள்.

நிர்வாக ரீதியாகவும், நீதிக்குப் புறம்பாகவும் அத்துமீறல்கள் புரிந்து தமிழ் மண் பறிக்கப்படுகிறது. நாம் பெரும்பான்மையினர்; அரசு எமது அரசு; எம்மைக் கேட்க எவரும் இல்லை; தடுக்க எவரும் இல்லை; என்ற இறுமாப்புடன் மண் பறிக்கும் மனித உரிமை மீறல் நடக்கிறது.

இந்த அநியாயத்தை, அக்கிரமத்தை, அநீதியை, அடாத்துத்தனத்தை தடுக்க திராணியில்லாதவர்களாக, தங்கள் மண்ணைப் பாதுகாக்க முடியாதவர்களாக தமிழர்கள் கண்ணீர் வடிக்கிறார்கள். அரச பயங்கரவாதம் இராட்சதன் போல் வளர்ந்துள்ளதால் இந்த நிலை.

திருகோணமலையில் ருசி கண்ட சிங்களத் தீவிரவாதம் இப்போது மட்டக்களப்பையும் மேயத் தொடங்கி இருக்கிறது. மகாவலி அபிவிருத்தியின் மதுறுஓயாத் திட்டத்தின் கீழ் கல்குடா சிங்களவர்களைக் குடியேற்றுவதற்குத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

தேவநாயகம் காலத்தில் மெல்லியதாகத் தொடங்கப்பட்டது. இப்போது வேகம் கொண்டிருக்கிறது.

தமிழர் மண் பறிப்பை நூற்றுக்கு நூறு நிறைவேற்றி, கிழக்கைச் சிங்கள மாகாணமாக்குவதை விரைவுபடுத்துவதற்காகவே யுத்தம் தொடரப்படுகிறது. கடன் வாங்கி ஆயுதங்கள் குவிக்கப்படுகின்றன.

கிழக்கை ஆசியாவின் பலஸ்தீனம் ஆக்கி, தமிழர் மண்ணைப் பறிக்கும் கொழும்பு அரசினதும், சிங்களத் தீவிரவாதிகளினதும் கொடிய திட்டத்தை கடைசித் தமிழன் உள்ளவரை எதிர்த்துப் போராடிட சங்கற்பம் கொள்ள வேண்டும்.

# மட்டக்களப்பிலும் பஸ் ஊழியருக்கு சம்பளம் வழங்க முடியாத நிலைமை

## 12 பஸ்களே சேவையில்

மட்டக்களப்பு, நவ.19

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெறும் மட்டுப்படுத்தப்பட்ட பஸ் சேவையால் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க முடியாதுள்ளதாக மட்டக்களப்பு போக்குவரத்துச் சபை டிப்போ உயர் அதிகாரி தெரிவித்தார்.

கடந்த காலங்களில் 28 பஸ்கள் சேவையில் ஈடுபட்டன. தற்சமயம் 12 பஸ்களே சேவையில் ஈடுபடுகின்றன.

இவற்றின் மூலம் மாதாந்தம் மூன்று லட்சம் ரூபாவே வருமானம் கிடைக்கிறது. ஆனால் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு மட்டும் 5 லட்சத்து 10 ஆயிரம் ரூபா தேவையாக உள்ளது.

இந்நிலையில் சகல ஊழியர்களுக்கும் சம்பளம் வழங்க முடியாதுள்ளது என்றார் அவர்.

வட பிராந்தியத்திலும் போக்குவரத்துச் சேவை தடைப்பட்டுள்ளதால் வ.பி.போ. சபை ஊழியர்களுக்கு ஆகஸ்ட் மாதத்தின் பின்னர் சம்பளம் எதுவும் வழங்கப்படாமல் அவர்கள் கஷ்டமுறுவது தெரிந்ததே. (இ-3)

## மனித முன்னேற்ற நடுநிலையம் உதவி

இராணுவ நடவடிக்கை காரணமாகப் பல்வேறு பகுதிகளிலும் இருந்து இடம்பெயர்ந்துவந்த சுமார் 600 குடும்பங்கள் இளவாலை மாரீசன்கூடல் பகுதியிலுள்ள கத்தோலிக்க ஆலயங்களில் தங்கியுள்ளன.

இவர்களுக்கு கடந்த ஜூன் மாதம் முதல் உணவு, சுகாதார வசதிகளை யாழ். கத்தோலிக்க மனித முன்னேற்ற நடுநிலையம் செய்துவருகிறது. (இ-5)

## 5 ஆவது வார உலர் உணவு இப்போது தான் விநியோகம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐந்தாவது வார உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரச்சினைகள் ஆரம்பிக்கப்பட்டு ஐந்து மாதங்கள் ஆகிவிட்டன.

வாரா வாரம் வழங்கப்படும் நிவாரண உதவித்தொகைகள் 20 வாரங்களுக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் ஐந்தாவது வார உணவு இப்போது தான் வழங்கப்பட்டு வருகிறது. (இ-3)

## முக்கிய ஜே.வி.பி. தலைவரை தேடி படையினர் வேட்டை

கொழும்பு, நவ 19

தலைமறைவாகியுள்ள ஜே.வி.பி. தலைவர் ஒருவரை கைது செய்ய முழு அளவிலான தேடுதல் நடவடிக்கை ஒன்றை இராணுவமும் பொலீஸும் கூட்டாக ஆரம்பித்துள்ளன.

கொல்லப்பட்ட ஜே.வி.பி. தலைவர் ரோஹண விஜேவீராவின் நெருங்கிய உறவினரான இவர், பல தாக்குதல் சம்பவங்களுக்குப் பொறுப்பானவர் என்று பாதுகாப்புப் படையினர் கருதுகின்றனர்.

இதேவேளை ஜே.வி.பி. அச்சுறுத்தல் தென்பகுதியில் இப்போது இல்லை என்று வங்கி நிர்வாகங்களுக்கு பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா தெரிவித்துள்ளார்.

கொள்ளையர்களே வங்கிக் கொள்ளைகளை நடத்தி விட்டு, ஜே.வி.பி.யினர் மீது பழி போடுவதாகவும் அவர் கூறியுள்ளார். (இ-எ)

# அதிரடித் தாக்குதலுக்கு நின்றுபிடிக்க முடியாமல் கோட்டையை விட்டு தப்பியோடினர் படையினர்!

## (XII)

செப்டெம்பர் 25 ஆம் திகதி நள்ளிரவு கோட்டைப் பக்கத்திலிருந்து கேட்ட காதைப்பிளக்கும் சத்தங்கள், கோட்டையில் கடும் சண்டை நடப்பதைத் தெளிவுபடுத்தின.

அடுத்த நாள் — 26 ஆம் திகதி அதிகாலையில் — திலீபனின் 3ஆம் ஆண்டு நினைவு தினத்தன்று — பொழுது புலரப் புலர மோதல் சத்தங்களும் மெள்ள, மெள்ள ஓயத் தொடங்கின.

அதன் பின்னர், முற்பகல் வேளையில் கோட்டை புலிகள் வசம் வீழ்ந்த செய்தி குடாநாடு எங்கும் பரவத் தொடங்கியது.

25ஆம் திகதி இரவு இடம்பெற்ற திடீர்த் தாக்குதலுக்கு ஈடுகொடுக்கமுடியாமல் படையினர் கோட்டையை விட்டு ஓட்டம் பிடித்தார்களா? அல்லது ஏற்கனவே திட்டம் தீட்டியபடி அந்தத் தினத்தில் தப்பிப் போனார்களா?

கோட்டையை இந்தக் கேள்விக் கண்ணோட்டத்துடன் ஒரு நோட்டம் விட்டேன்.

சிப்பாய்கள் கோட்டையைப் பறிகொடுத்து 20 நாட்களின் பின்னர் நான் அங்கு கண்டவை கோட்டையை விட்டு ஓடும் எண்ணம் ஏற்கனவே படையினருக்கு இருந்தது என்பதை ஓரளவு தெளிவுபடுத்தின.

வங்கிகளின் பணம் மற்றும் நகைகள் சேமிக்கப்பட்டிருந்த இரும்புப் பெட்டகங்கள்—அப்படியே கோட்டைக் கட்டடங்களில் இருந்து வெளியே கொண்டுவரப்பட்டு குண்டு வைத்துத் திறக்கப்பட்டிருந்தன.

அதற்குள் இருந்த ஒரு சதக் குற்றிகள் ஆங்காங்கே சிதறிக் கிடந்தன. ஏனைய பணம் மற்றும் நகைகள் இருந்த அடையாளமே தெரியவில்லை.

திட்டமிடப்பட்ட முறையில் பெறுமதிமிக்க பொருள்கள் அப்புறப்படுத்தப்பட்டிருந்தது புலனாகியது.

### எரிக்கப்பட்டன

விடுதலைப் புலிகள் தெரிவித்த தகவல்களின்படி கோட்டையைக் கைப்பற்றிய பின்னர் அங்கிருந்து மீட்கப்பட்ட ஆயுதங்களின் எண்ணிக்கை, அங்கு நீண்ட காலம் ஸ்ரீலங்காப் படை நிலைகொண்டிருந்ததோடு ஒப்பிடும் போது மிக பெரிய எண்ணிக்கை என்பதல்ல.

ஆகவே ஆயுதங்களில் ஒரு பகுதியும் அப்புறப்படுத்தப்பட்டிருக்கிறது; அல்லது சேதமாக்கப்பட்டிருக்கிறது.

கோட்டைப் பக்கம் நேரடிப் பார்வை

பல வரபிள்கள் எரிக்கப்பட்ட நிலையில் கோட்டை வளவுகளுக்குள் கிடந்ததைக் காண முடிந்தது.

இது போலவே தட்டச்சு மற்றும் உபகரணங்கள், வாகனங்கள், ஜெனரேட்டர் போன்றவையும் எரிந்த நிலையில் கிடந்தன.

### அப்புறப்படுத்தி இருந்தனர்

கோட்டையின் குகை போன்ற அமைப்புகளுக்குள் இருந்த களஞ்சிய அறை போன்றவையும்— தீ வைத்து எரிக்கப்பட்டு-யாருக்கும் உதவாத நிலைக்குத் தள்ளப்பட்டுக் கிடந்ததைக் கண்டேன்.

இவ்வாறு, சுமார் ஐநூறு யார் நீளமுள்ள கோட்டையின் உட்பிரகாரம் முழுவதும், அழிவு வேலைகளும் அப்புறப்படுத்தும் வேலைகளும் இடம்பெற்றதற்கான தடயங்கள் தெரிந்தன.

ஆகவே கோட்டையை விட்டு ஓட்டம் பிடிக்கும் வேளையை எந்நேரமும் எதிர்பார்த்து அதற்கான முன்னேற்பாடுகளைச் செய்து விட்டு- படையினர் காத்திருந்தார்கள் என்பது திண்ணம்.

ஆனாலும் கோட்டையை விட்டுத் தப்பியோடுவதற்கு இரண்டொரு நாட்களுக்கு முன்னரும், விமானத்திலிருந்து கோட்டையை நோக்கி வெற்றுச் சாக்குப் பொதிகள் வீசப்பட்டன என்றும்–

அவற்றில் சில பொதிகள் வானிலேயே குலைந்ததால் சாக்குகள் சிதறிப் பறந்து பரவலாக நகரின் பல பகுதிகளிலும் விழுந்தன என்றும்-செய்திகள் வெளியாகியது வாசகர்கள் அறிந்ததே.

ஓடித் தப்ப நினைத்திருக்கும் கோட்டை சிப்பாய்களுக்கு புதிய காவல் அரண்களை அமைக்க அல்லது அவற்றை பலப்படுத்த தேவையான வெற்றுச் சாக்குகள் விமானத்திலிருந்து வீசப்பட்டது ஏன்?

வெற்றுச் சாக்குகள் வீசப்படுவதால் - புதிய காவல் அரண்களை அமைத்து கோட்டையின் உட்பகுதியை சிப்பாய்கள் பலப்படுத்தப் போகிறார்கள் என விடுதலை புலிகளின் கவனத்தை தவறாகத் திசை திருப்பிவிட்டு-

அந்தச் சந்தர்ப்பத்தில் ஓடித் தப்பும் முயற்சியாகவும் இது இருந்திருக்கலாம்.

ஆனாலும் அப்படி ஓடித் தப்புவதாக இருந்தாலும் -விடுதலைப் புலிகளுக்கு -ஈழத் தமிழர்களுக்கு- மிக முக்கியத்துவம் வாய்ந்த நாளாகக் கருதப்படும் திலீபனின் நினைவு தினத்தன்று கோட்டை புலிகள் வசம் வீழக்கூடியதாக படையினர் ஓட்டம் பிடித்தது ஏன்?

### அதிரடி நிலை குலைய வைத்தது

இதற்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம்.

ஒன்று—

எந்நேரமும் ஓட்டம் பிடிக்க ஆயத்தமாக இருந்த படையினரை 25 ஆம் திகதி நள்ளிரவு புலிகள் தொடுத்த அதிரடித் தாக்குதல் நிலை குலையச் செய்திருக்கிறது.

அல்லது—

திலீபனின் நினைவு தினம் புலிகளுக்கு மிக முக்கியத்துவமான -சிறப்பு மிக்க- நாளாகையால் அன்றைய தினம் எப்படியும் பெரும் தாக்குதல் ஒன்றை கோட்டை மீது புலிகள் நடத்தக்கூடும் என்று படையினர் அச்சம் கொண்டிருந்திருக்கலாம்.

அதனால் அந்தத் தாக்குதலுக்கு முதல் நாள் இரவே, இருட்டோடு இருட்டாக கோட்டையை விட்டு ஓட்டம் பிடிக்கப் படையினர் விரும்பியிருக்கலாம்.

### போராளிகளின் உயிர்த் தியாகம்

எது எப்படியிருந்தாலும் யாழ். கோட்டை விடுதலைப் புலிகள் வசம் வீழ்ந்ததற்கு-

அஞ்சா நெஞ்சத்துடன், சளைக்காமல் கோட்டையைச் சூழ்ந்து, இரவு பகல் பாராது,

**- கூர்விழியான் -**

புலிகள் போராளிகள் அமைத்த முற்றுகை-

நன்கு திட்டமிடப்பட்ட முறையில் அவ்வப்போது தொடுக்கப்பட்ட தாக்குதல்கள்-

முற்றுகையை முறியடிக்க வான், கடல், தரை மார்க்கமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை கனகச்சிதமாக வியூகம் அமைத்து முறியடித்த — புலிகளின் இராணுவத் தலைமையின் — சிறந்த வழி நடத்தல் —

இவை எல்லாவற்றுக்கும் மேலாக கோட்டையைக் கைப்பற்றுவதற்காக தங்கள் இன்னுயிரை அர்ப்பணித்த போராளிகளின் உயிர்த் தியாகம்-

இவையே காரணம் என்றால் அது மிகையாகாது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 1991

## வலிகாமம் மேற்குப் பிரதேசசபை,

### சுழிபுரம்.

1991 ஆம் ஆண்டுக்குக் கீழ்க்காணும் பொருட்களை வழங்குவதற்கான வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் பதிவுக் கட்டணத்தைச் செலுத்தியதன் பேரில் என்னால் 31 - 01 - 1991 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொன்றிற்குமான விண்ணப்பங்கள் அவற்றிற்கான பதிவுக் கட்டணத்துடன் தனித்தனியே சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பங்களை தபாலில் அனுப்புவோர் பதிவுக்கட்டணத்தை காசோலையாகவோ, அல்லது காசுக்கட்டளையாகவோ "விசேட ஆணையாளர். வலிகாமம் மேற்குப் பிரதேச சபை, சுழிபுரம்" என்ற பெயரில் அனுப்பி வைத்தல் வேண்டும்

| பொருட்கள், சேவைகள், | பதிவுக் கட்டணம் |
|---|---|
| 1. காகிதாதிகள் வழங்கல் | 50 00 |
| 2. சுகாதார சேவைக்கான பொருட்கள் வழங்கல் | 25 00 |
| 3. அச்சிட்ட படிவங்கள், பதிவேடுகள் வழங்கல் | 25 00 |
| 4. மின்சாரப் பொருட்கள் வழங்கல் | 100 00 |
| 5. வாகனத் தகடுகள் தயாரித்து வழங்கல் | 25 00 |
| 6. சீருடைத் துணிகள், சப்பாத்துக்கள் வழங்கல் | 50 00 |
| 7. மின் தூண்கள் வழங்கல் | 50.00 |
| 8. சித்த ஆயுள்வேத மருந்துகள் வழங்கல் (அங்கீகாரம் உடையவர் மட்டும்) | 50,00 |
| 9. வீடுகளுக்கு உள்ளக மின் இணைப்புச் செய்தல் | 50 00 |
| 10. புத்தகங்கள் கட்டுதல் | 25,00 |
| 11. தளபாடங்கள் அலுவலக உபகரணங்கள் விநியோகம் | 50 00 |

து. வைத்திலிங்கம்,
விசேட ஆணையாளர்
வலிகாமம் மேற்குப் பிரதேசசபை,
சுழிபுரம்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
தலைமையலுவலகம், 14 - 11 - 1990

(சி-5436)

## வலிகாமம் மேற்குப் பிரதேசசபை சுழிபுரம்

# 1991ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் மேற்குப் பிரதேசசபையின் சுழிபுரம் / சங்கானை / வட்டுக்கோட்டை / அராலி ஆகிய நிர்வாக பிரதேசத்திற்குட்பட்ட கீழ்க்குறிக்கப்பட்டுள்ள சந்தைகள், இறைச்சிக்கடைகள், சந்தைக்கடைகள் ஆகியவற்றிற்கான சீல் வைத்த கேள்விகள் 12-12-1990 திகதி நண்பகல் 12 00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். இவற்றிற்கான கேள்விப் பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் கீழ்க்குறிக்கப்பட்டுள்ள கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்வி பத்திரப் பணத்தையும் 26-11-1990ஆம் திகதியிலிருந்து 7-12-1990 ஆந் திகதி நண்பகல் 12 00 மணி வரை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். மேலும் கேள்வி சம்பந்தமான தேவையான விவரங்களையும், நிபந்தனைகளையும் தலைமை அலுவலகத்திலும் உப அலுவலகங்களிலும் அறிந்து கொள்ளலாம்.

| உப அலுவலகம் | குத்தகையின் தன்மை | ஏற்றுக்கொள்ள கூடியகுறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப் பணம் | கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|---|---|
| 1. சுழிபுரம் | 1. சத்தியக்காட்டுச்சந்தை | 25,050 00 | 100.00 | 25 00 |
| | 2. பண்ணாகுட்டிச் சந்தை | 8.800.00 | 100.00 | 25 00 |
| | 3. தொலபுரம் மத்தியசந்தை | 500 00 | 50 00 | 25.00 |
| | 4. பொன்னாலைச் சந்தை | 2.000.00 | 100 00 | 25 00 |
| | 5. மாட்டிறைச்சிக்கடை | 8,000.00 | 100 00 | 25 00 |
| | 6. ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 50 00 | 25 00 |
| | 7. புதிய சந்தைக்கடை இல. 5 | 25,000 00 | 250 00 | 25 00 |
| | 8. கருவாட்டுக்கடை | 500.00 | 50.00 | 25.00 |
| 2. சங்கானை | 1. மாட்டிறைச்சிக்கடை | 48 050.00 | 250.00 | 25.00 |
| | 2. ஆட்டிறைச்சிக்கடை | 3,100 00 | 100 00 | 25 00 |
| | 3 கருவாட்டுக்கடை | 1,000.00 | 100.00 | 25 00 |
| | 4 பொதுமரக்கறிச் சந்தை | 50,050.00 | 250 00 | 25.00 |
| | 5. மீன் சந்தை | 48, 050 00 | 250.00 | 25.00 |
| 3 வட்டுக்கோட்டை | 1. பொதுச் சந்தை | 27. 535 00 | 100 00 | 25 00 |
| | 2. ஆட்டிறைச்சிக்கடை | 3 000.00 | 100.00 | 25 00 |

குறிப்பு: வட்டுக்கோட்டை, சுழிபுரம் ஆட்டிறைச்சிக்கடைகளுக்கு சித்திபெய்திய கேள்விக்காரர் பிரமாணங்களுக்கு அமைய தாமே வியாபாரத்தளத்தை அமைத்துக் கொள்ளல வேண்டும்.

து. வைத்திலிங்கம்,
விசேட ஆணையாளர்.

வலிகாமம் மேற்குப் பிரதேசசபை,
தலைமையலுவலகம், சுழிபுரம்.
14-11-1990

[சி-5435]

# நெடுந்தீவு தண்ணீர் தாங்கி துருப்பிடிக்கும் நிலையில்

நெடுந்தீவு, நவ. 19

நெடுந்தீவு மத்தி, கிழக்குப் பகுதிகளுக்கான குடி தண்ணீர்விநியோகம் நிரந்தரமாக தடைப்படலாம் என்று அஞ்சப்படுகின்றது

குடி தண்ணீர் தாங்கி துருப்பிடித்து மிகவும் மோசமான நிலையில் இருப்பதே இதற்குக் காரணம்.

சுமார் இருபதாயிரம் கலன் தண்ணீரைச் சேமித்து வைக்கக் கூடிய இத் தாங்கியில் இப்போது பத்தாயிரம் கலன் தண்ணீரை மட்டுமே தேக்கக் கூடியதாக உள்ளதாம்.

தீவுப்பகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஏ. எல். தம்பிஐயாவினால் திட்டமிடப்பட்டு அவரைத் தொடர்ந்து எம். பி. ஆகிய திரு. வீ ஏ. கந்தையாவின் காலத்தில் பூர்த்தியாக்கப்பட்ட இத்தாங்கிக்கு இது வரை ஒரேயொரு தடவை மட்டுமே பெயின்ட் பூசப்பட்டது என்று கூறப்படுகிறது (இ-111)

# அரவம் தீண்டி மரணம் இலங்கையில் தான் அதிகம்

பாம்புக்கடியினால் உயிரிழப்போர் எண்ணிக்கை மற்றும் விதம் உலகிலேயே இலங்கையில் தான் அதிகம் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

குறைந்தது தின மும்மூன்று பேர் இலங்கையில் பாம்பு கடித்து உயிரிழக்கின்றனர் என அறிய வந்துள்ளது.

இலங்கையில் 93 விதமான தரை, கடல்பாம்புகள் உள்ளன, அவற்றில் நான்கு விதமான பாம்புகள் தான் 98 சதவீதமானோர் உயிரிழப்பதற்குக் காரணமாக அமைந்துள்ளன என்று கொழும்பு பல்கலைக் கழக வைத்தியப் பேராசிரியர் ரவீந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

## வடபகுதியில் முதன்முறையாக

# கிளிநொச்சியில் விவசாயபீடம்: இயங்கத் தொடங்கி விட்டது

யாழ் பல்கலைக்கழக விவசாய பீடம் வியாழக்கிழமை முதல் கிளிநொச்சியில் இயங்க ஆரம்பித்தது.

கிளிநொச்சியில் விவசாய பீடத்துக்கான கட்டட வேலைகள் பூர்த்தியடையாததால், தற்காலிகமாக அங்குள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் இந்தப்பீடம் இயங்குகிறது.

இந்தப் பீடத்துக்கான மாணவர் அனுமதி அடுத்த மாதம் மூன்றாம் திகதி ஆரம்பிக்கப்பட இருக்கிறது

வடபகுதியில் கிளிநொச்சியில்தான் முதன் முதலாக விவசாய பீடம் இயங்கத் தொடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஓ-3)


## போட்டோஸ்ரற்

மீண்டும் யாழ்நகரில் தரமான போட்டோஸ்ரற் றேணியோ வேலைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள்.

★ "ஸ்கைலைன்ஸ்" ★
281, B மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்,
☆ 'SKYLINES' ☆
281, B Clock Tower Road, Jaffna.
(ஏஜென்சி தபால் கந்தோர் அருகாமை)

(சி/5443)

## விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

### பிரிவு 2 ஆரம்பம்:-

O/L DAY CLASSES [19-11-90] 8 30 - 1.30
SAT & SUN CLASSES [17-11-90] 8.00 - 1.00
EVENING CLASSES [19-11-90] 2.30 - 5.00

ஆண்டு 10, 9, 8, 7, 6 புதிய பிரிவு 2 ஆரம்பமாகிவிட்டது.

முக்கிய குறிப்பு:- I கடமை, கட்டுப்பாட்டுடன் நடாத்தும் ஒரே நிறுவனம்.
II. O/L வகுப்புக்கள் தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படும்.

[சி-5421]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைத்தீவில்:

## விசர்நாய்கள் - பாம்புகள் தொல்லை அதிகரிக்கிறது

முல்லைத்தீவு மாவட்டத்தில் நாய்க்கடி, பாம்புக்கடி என்பன கணிசமான அளவில் அதிகரித்து வருகின்றன.

அங்கு சென்று திரும்பிய செஞ்சிலுவைச் சங்க டாக்டர் ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

அண்மைக் காலத்தில் அங்கு 18 பேர் விசர்நாய்க் கடிக்கு இலக்காகினர்.

அவர்களில் மூவர் இதனால் மரணமாகிவிட்டனர். விசர்நாய்க்கடி தடுப்பு மருந்தாகிய ஏ. ஆர். வி. அங்கு இல்லை.

அதேசமயம்- அண்மையில் மழைகாலம் ஆரம்பித்ததை அடுத்து முல்லைத்தீவில் மலேரியா நோய் பரவிவருகிறது.

பாம்பினால் தீண்டப்படுவோர் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. (இ-6)

## ஆஸ்பத்திரி கழிவுகளை அகற்ற டீசல் கோரப்படுகிறது

யாழ்ப்பாணம், நவ. 19

யாழ். போதனா ஆஸ்பத்திரியிலிருந்து கழிவுகளை அகற்றும் பணியை மேற்கொள்வதற்கு உதவியாக எரிபொருள் பெற்றுத் தருமாறு ஆஸ்பத்திரி வட்டாரங்களிடம் யாழ். மாநகரசபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

தற்போது வெளிச்சந்தையில் அதிகவிலையில் டீசலைக் கொள்வனவு செய்தே மாநகரசபையினர் இந்தப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-6)

## நெடுந்தீவுக் கடற்பகுதியில் கடற்படைரோந்து தீவிரம்

நெடுந்தீவு தெற்கு, மேற்குக் கடல் பகுதிகளில் கடற்படைப் படகுகளின் ரோந்து நடவடிக்கைகள் தீவிரமாகி உள்ளன.

இதே சமயம் அனலைதீவு கடற்பிராந்தியத்திலும் கடற்படைப்படகுகளின் கண்காணிப்புகள் அதிகரித்துள்ளன. (இ-111)

# உலகச் செய்திகள்

## பெனாசிர் நீதிமன்றில் ஆஜர்

லாகூர், நவ. 19

அதிகார துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டின் மீது பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ கடந்தசனிக்கிழமை லாகூரில் விசேட நீதிமன்றம் ஒன்றின் முன்னால் ஆஜரானார்.

தாம் குற்றவாளி அல்லர் என்று கூறிய பெனாசிர் தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை; உள்நோக்கம் கொண்டவை என்று கூறினார். பதவி நீக்கம் செய்யப்பட்டபின்னர் பெனாசிர்மீது ஜனாதிபதி குலாம் இஷாக்கான் ஏழு வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளார்.

இவ்வழக்குகளில் ஒன்றிலாவது பெனாசிர் குற்றவாளியாகக் காணப்பட்டால், அவருக்கு சிறைத்தண்டனை கிடைப்பதுடன் குடியியல் உரிமையை ஏழு ஆண்டுகளுக்கு இழக்கவேண்டியும் ஏற்படும். [இ-எ]

## கருணாநிதி - பர்னாலா சந்திப்பு

சென்னை, நவ. 19

தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி மாநில ஆளுநர் சுர்ஜித்சிங் பர்னாலாவை சந்தித்துப்பேசினார். கடந்த சனிக்கிழமை 30 நிமிடங்கள் வரை இருவரும் பேச்சுக்கள் நடத்தினர்- (இ-எ)

## சோவியத்தில் மாற்றங்கள்

மாஸ்கோ, நவ. 19

சோவியத் ஆட்சி அமைப்பில் பாரிய மாற்றங்களைச் செய்ய வழிவகுக்கும் ஜனாதிபதி கோர்ப்பச்சேவின் யோசனை நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

ஆதரவாக 316 வாக்குகளும் எதிராக 15 வாக்குகளும் கிடைத்தன. 81 பேர் நடுநிலைமை வகித்தனர்.

புதிய மாற்றங்களின் கீழ் பிரதமரின் அதிகாரங்களை ஜனாதிபதியே வைத்துக் கொள்வார். உப ஜனாதிபதி பதவி ஒன்றும் புதிதாக உருவாக்கப்படும்.

மாநிலக் குடியரசுகளுக்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்கும் சமஷ்டி கவுன்ஸில் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.

மாநிலக் குடியரசுகளின் பிரதிநிதிகள் அங்கம்வகிக்கும் பாதுகாப்புச்சபை ஒன்றும் புதிதாக உருவாக்கப்படவுள்ளது. (இ-எ)

## தாட்சர் பதவி விலக வலியுறுத்து

லண்டன், நவ. 19

பிரிட்டிஷ் பிரதமர் தாட்சர் பதவி விலகி, ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சிக்கு புதிய தலைவர் ஒருவர் தெரிவுசெய்யப்பட வழிவிடவேண்டும்.

இப்படி லண்டன் பத்திரிகைகள் பல நேற்று ஆசிரியர் தலையங்கங்கள் எழுதின.

தாட்சருக்கு பிரியாவிடை அளிக்கும் தருணம் வந்துவிட்டதாக 'சண்டே டைம்ஸ்' கூறுகிறது.

ஆளும் கட்சியில் வலது குறைந்தவராக தாட்சர் மாறிவிட்டார் என்று 'மெயில்' பத்திரிகை தெரிவித்தது. [இ-எ]

## ஐரோப்பிய பாதுகாப்பு மாநாடு

ஐரோப்பிய பாதுகாப்பு மாநாடு இன்று திங்கட்கிழமை பாரிஸில் ஆரம்பமாகிறது.

சோவியத் யூனியன், அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் ஜனாதிபதிகள் மற்றும் ஐரோப்பிய நாடுகளின் ஜனாதிபதிகள், பிரதமர்கள் ஆகியோர் மாநாட்டில் கலந்துகொள்ள உள்ளனர். (இ-எ)

# 'டிரான்ஸ்போமர் ஒயில்' வரும் சாத்தியம் இல்லை

### பேச்சுக்கே இடமில்லை என அதிகாரிகள் கைவிரிப்பு

யாழ்ப்பாணம், நவ. 19

யாழ். குடாநாட்டில் மின் விநியோகத்தை சீராக்குவதற்கு தேவைப்படும் 'டிரான்ஸ்போமர் ஒயில்' வந்து சேர்வதற்கான சாத்தியம் எதுவும் இல்லை.

அண்மையில் கொழும்பு சென்றிருந்த யாழ். அரச அதிபர் திரு. அனரன் அல்பிரட், டிரான்ஸ்போமர் ஒயில் இல்லாததால் யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளில் மின்விநியோகம் தடைப்பட்டுள்ளது சம்பந்தமாக மின்சக்தி, எரிபொருள் அமைச்சுச் செயலாளருடன் பேச்சு நடத்தினார்.

டிரான்ஸ்போமர்களுக்குத் தேவைப்படும் ஒயில் பற்றி அரச அதிபர் பிரஸ்தாபித்தபோது டிரான்ஸ்போமர் ஒயில் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று அரச அதிபரிடம் தெரிவிக்கப்பட்டதாம்.

எனினும் மாங்குளம் பகுதியில் ஏற்பட்டுள்ள சேதத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகக் கூறப்பட்டது.

மாங்குளத்தில் ஏற்பட்ட சேதம் திருத்தப்பட்டு வடபகுதிக்கான நீர் மின்சாரம் மீண்டும் கிடைத்தாலும், டிரான்ஸ்போமர் ஒயில் இல்லாத காரணத்தால வடக்கின் பெரும்பாலான பகுதிகள் தொடர்ந்து இருளிலேயே இருந்து வரப்போகின்றன. (இ-6)

## பாடசாலையில் தருமப்பணம்

காங்கேசன்துறை, நவ. 19

குப்பிளான் உப தபால் அலுவலகத்தில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் (தருமப்பணம்) பெறுவோருக்கான ஜூலை ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் மாதங்களுக்குரிய கொடுப்பனவுகள் மயிலங்காடு ஸ்ரீ முருகன் பாடசாலையில் வைத்து வழங்கப்படுகின்றன. (இ-68)

---

வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேசசபை,

நெல்லியடி, கரவெட்டி.

# கேள்வி அறிவித்தல் - 1991

வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக் கடைகள், சைக்கிள் பாதுகாப்பு நிலையம், ஆகியவற்றை 1991ஆம் ஆண்டு தை மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 1991 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆம் திகதி வரை குத்தகைக்கு விற்பனவு செய்வதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 05- 12- 1990 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேசசபையின் நெல்லியடியிலுள்ள தலைமை அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் யாவும் அப்பகுதிப் பிரதேசசபை உப அலுவலகங்களின் பொறுப்பதிகாரிகளால் கேள்வி வைப்புப் பணமும் கேள்விப்பத்திரப் பணமும் செலுத்துவதன் பேரில் 03- 12- 1990ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை வழங்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரத்தின் மூலப்பிரதியை 'விசேட ஆணையாளர், வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேசசபை, தலைமை அலுவலகம், நெல்லியடி, கரவெட்டி எனவும் இணைப் பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் எனவும் முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அன்றேல் அதெற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில் இன்ன குத்தகைக்கான கேள்வி எனக் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் அடையாள அட்டை காண்பித்தல் வேண்டும்

தேர்வு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளுக்கமைய குத்தகையை எடுத்து நடத்தல் வேண்டும். நிபந்தனைகளில் ஏதாவது ஒன்றை மீறுமிடத்து எதுவித நட்டஈடுமின்றிக் குத்தகை உரிமையை இரத்துச் செய்யும் அதிகாரம் விசேட ஆணையாளருக்கு உண்டு. வேறு விபரங்களை அறிய விரும்பின் அந்தந்தப் பிரதேசசபை உப அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

இ. ஐயாத்துரை,
விசேட ஆணையாளர்,
வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேசசபை,
கரவெட்டி.

வடமராட்சி தெற்கு, மேற்கு,
பிரதேசசபை தலைமை அலுவலகம்,
நெல்லியடி, கரவெட்டி,
13- 11- 1990

| உப அலுவலகம் | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்புப் பணம் | மதிப்பிட்டுத் தொகை |
|---|---|---|---|
| **நெல்லியடி உப அலுவலகம்** | | | |
| 1. மரக்கறிச் சந்தை, நெல்லியடி | 100.00 | 1000.00 | 2,63 000.00 |
| 2. மீன் சந்தை, நெல்லியடி | 100 00 | 1000.00 | 46,000.00 |
| 3. கோவில் சந்தை | 100.00 | 500.00 | 4000.00 |
| 4. ஆட்டிறைச்சிக்கடை இல. 1 | 50.00 | 500.00 | 4000 00 |
| ஆட்டிறைச்சிக்கடை இல. 2 | 50.00 | 500 00 | 4500.00 |
| ஆட்டிறைச்சிக்கடை இல. 3 | 50.00 | 500.00 | 3500.00 |
| 5. மாட்டிறைச்சிக்கடை | 100.00 | 1000.00 | 1,61,000.00 |
| 6. கொட்டடிச் சந்தை | 50.00 | 250.00 | 4100.00 |
| 7. சைக்கிள் பாதுகாப்பு நிலையம் | 100.00 | 1000.00 | 20,000.00 |
| **கட்டைவேலி உப அலுவலகம்** | | | |
| 1. துன்னாலை வடக்குச் சந்தை | 50.00 | 100.00 | 800.00 |
| 2. அல்வாய் தெற்கு புதிய சந்தை | 50.00 | 100.00 | 500.00 |
| 3. துன்னாலை வடக்கு ஆட்டிறைச்சிக்கடை | 50.00 | 100.00 | 1500.00 |
| 4. கரவெட்டி கிழக்கு மாட்டிறைச்சிக்கடை | 50.00 | 250.00 | 4000.00 |
| **உடுப்பிட்டி உப அலுவலகம்** | | | |
| 1. உடுப்பிட்டிச் சந்தை | 100.00 | 1000.00 | 64,000.00 |
| 2. அந்திரான் சந்தை | 100.00 | 500.00 | 6100.00 |
| 3. நவிண்டில் சந்தை | 50.00 | 250.00 | 4000.00 |
| 4. உடுப்பிட்டிச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 100.00 | 1000.00 | 95,000 00 |
| 5. உடுப்பிட்டிச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 50.00 | 250.00 | 1300.00 |
| **சேவை - (நெல்லியடி உப அலுவலகம்)** | | | |
| 1. குப்பை கூழங்களை அகற்ற இரட்டை மாட்டு வண்டில் வாடகைக்கு வழங்குதல் | 50.00 | 250.00 | — |
| 2. குப்பை கூழங்களை அகற்ற உழவு இயந்திரம் பெட்டி உட்பட வாடகைக்கு வழங்குதல் | 100.00 | 500.00 | — |

(சி/5442)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். ஆஸ்பத்திரிக்கு 40 வீத தாதியரே வரவு

யாழ். போதனா ஆஸ்பத்திரியில் தாதியர் வரவு குறைவாகவே உள்ளது. சுமார் 40 வீதத்தினரே சடமைக்கு வருகின்றனர். இதனால் ஆஸ்பத்திரி வேலைகளில் பாதிப்பு ஏற்பட்டு வருகிறது.

யாழ். ஆஸ்பத்திரி மானிப்பாயில் இருந்து நகருக்கு மாற்றப்பட்ட பின்னரும்கூட தாதியர் வரவில் குறிப்பிடத்தக்க அளவு மாற்றம் ஏதும் ஏற்படவில்லை எனத் தெரியவந்துள்ளது. [ஒ-3]

# தி.மு.கவுக்கும் புலிகளுக்கும் ஒத்துழைப்பு நிலவுகிறது

## வாழப்பாடி குற்றச்சாட்டு

சென்னை, நவ 19

தி.மு.கவுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் எந்தவித முரண்பாடும் இன்றி ஒத்துழைப்பு நிலவுகிறது.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி நேற்று முன்கண்டவாறு சொன்னார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் செயற்பாடுகளுக்கு தமிழக அரசு துணைபோகிறது என்றும் திரு. இராமமூர்த்தி குற்றஞ்சாட்டினார்.

தமிழகத்தில் துப்பாக்கிக் கலாசாரம் மத்திய அரசின் கவனத்தை ஈர்க்கும் அளவுக்கு வளர்ந்துவிட்டது.

கைதான போராளிகளைத் தமிழக அரசு விடுவித்துவிட்டதாக இந்தியக் கடற்படைத் தளபதியாக வர இருப்பவர் தெரிவித்த குற்றச்சாட்டுக்கு தமிழக அரசு அரசியல் முலாம்பூச முயற்சிப்பது ஆபத்தானதாகும்.

மாநில நிலைவரத்தைத் திசை திருப்பும் முயற்சியாக கடற்படைத் தளபதியின் பேச்சை வெறும் அரசு அதிகாரி ஒருவர் கூறிய குற்றச்சாட்டாக தமிழக அரசு கருதியிருக்கிறது.

— இப்படி திரு இராமமூர்த்தி செய்தியாளர் மத்தியில்பேசுகையில் சொன்னார். (உ-எ)

### வெளியுறவு அமைச்சர் மட்டத்தில்

# சார்க் மாநாடு நேற்று குறும்பாதீவில் ஆரம்பம்

சார்க் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு நேற்று மாலைதீவில் குறும்பாத்தீவில் ஆரம்பமாகியது.

இந்தியா தவிர்ந்த ஏனைய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கலந்துகொண்டனர்.

புதிய வெளியுறவு அமைச்சர் தெரிவானவுடன்-அனேகமாக இன்று - அவர் இந்த மாநாட்டில் கலந்து கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (உ-எ]

### இந்திய பாஸ்போர்ட் உள்ள

# தோட்டத் தொழிலாளருக்கு இலவச விமானப் பயணம்!

கொழும்பு, நவ. 19

இந்திய பாஸ்போர்ட்வைத்துள்ள மலையகத் தோட்டத் தொழிலாளர்களை இலவசமாக விமானமூலம் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பி வைக்க இலங்கை அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது.

சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்திய பாஸ்போர்ட் பெற்றுள்ளவர்களே இப்படி திருப்பி அனுப்பப்படுவார்கள் என்றும்-இதற்கான அனுமதியை பெருந்தோட்டத் தொழிற்றுறை அமைச்சரும் பாதுகாப்புத் துணை அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்தினா வழங்கிவிட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

# மரண அறிவித்தல்

## கந்தையா வைத்திலிங்கம்

காரைநகர் துறைமுகம் முன்னை ள் பிரபல வர்த்தகரும், பலகாட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவருமாகிய கந்தையா வைத்திலிங்கம் 17-11-90 சனிக்கிழமை காலமானார். அன்னார் தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும், சிவபாக்கியம், பொன்னம்மா, தியாகராசா [ஆசிரியர் சோமஸ்கந்தா கல்லூரி புத்தூர்], நமசிவாயம் [நியூசிவாயம், யாழ்ப்பாணம்], சிவசம்பு, தர்மலிங்கம், கந்தசாமி, பரமசாமி, தம்பிராசா, தம்பியையா, பரஞ்சோதி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, நடராசா, அன்னம்மா, நாகேஸ்வரி, பரமேஸ்வரி, புவனேஸ்வரி, ராஜேஸ்வரி, திலகவதி, சாவித்திரி தேவி, புனிதவதி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 18-11-90 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. உற்றார், உறவினர்கள் இத் தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

பலகாடு,
காரைநகர்.

வை. நமசிவாயம்
[மகன்] [14655]

# மலையகத்தில் குழப்பம் ஏற்படுத்த சில சக்திகள் முயற்சி!

## பொலீஸாரை சாடுகிறார் தொண்டா

நுவரெலியா, நவ. 19

மலையகத்தில் குழப்பத்தை ஏற்படுத்த சில சக்திகள் பல வழிகளிலும் முயன்று வருகின்றன.

சிறுசிறு சம்பவங்களையும் பெரிதுபடுத்தி மலையகத்தில் குழப்பமும், குளறுபடியும் நிலவுவதாக சிலர் பிரசாரம் செய்கிறார்கள். அமைதி நிலவுவதை விரும்பாத சிலசக்திகளே இந்தப் பிரசாரத்தில் இறங்கியுள்ளன.

இப்படிக் கூறுகிறார் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான திரு. எஸ் தொண்டமான்.

பசுமலை தமிழ் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

மலையகத்தில் அமைதியும் சமாதானமும் நிலவுவது பொலீஸாருக்கும் பிடிக்கவில்லை. அதனால் தான் தேவையற்ற பிரசாரத்தை அவர்கள் செய்து வருகிறார்கள்.

மலையகத்தில் குழப்பம் நிலவினால் தான் வடக்கு-கிழக்கு பகுதிக்குக் கடமைக்குச் செல்லாமல் இங்கேயே இருந்துவிடலாம் என்று பொலீஸார் எண்ணுகிறார்கள்-என்றார். (ஒ-3)

# இன்றைய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 19

யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் ஆயுள்வேத வைத்திய உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் இன்று திங்கள் காலை 11 00 மணிக்கு பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தலைமையில், கொக்குவில் உப அலுவலகத்தில் நடைபெறும். (இ-6)

# இணைப்பு பற்றி இன்று ஆராய்வு

வடக்கு - கிழக்கு நிரந்தர இணைப்பு மற்றும் ஆறாவது அரசியல் சட்டத்திருத்த நீக்கம் ஆகிய விஷயங்கள் குறித்து இன்று திங்கட்கிழமை நடைபெறும் ஐக்கிய தேசிய கட்சிச் செயற்குழுக் கூட்டத்தில் முக்கிய ஆலோசனைகள் இடம்பெறவிருக்கின்றன. (இ-எ)

# 'பற்றரி'யுடன் வந்தவருக்கு நேர்ந்த கதி!

யாழ்ப்பாணத்துக்கு பயணி ஒருவர் மறைத்துக்கொண்டு வந்த ''டோர்ச் பற்றறி''கள் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டன.

நேற்று முன்தினம் (சனி) வவுனியா தடை முகாமில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

சுமார் 55 வயதுடைய பிரஸ்தாப நபரை இராணுவத்தினர் பலமாகத் தாக்கியுள்ளனர். நீ ''கொட்டியாவா?'' (நீ புலியா?) எனக்கேட்டு துப்பாக்கியின் பின்புறத்தாலும் அவருக்கு அடிகள் விழுந்தனவாம். (ஒ-6)

# இன்னும் இல்லை

புதுடில்லி, நவ. 19

இந்தியப்பிரதமராக சந்திரசேகரும் துணைப் பிரதமராக தேவிலாலும் பதவியேற்று நேற்றுடன் ஒன்பது நாட்கள் முடிவடைந்தபோதும் நேற்று நள்ளிரவு வரை ஏனைய அமைச்சர்கள் விவரம் வெளியிடப்படவில்லை. [உ]

### ஒருமாத...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பெயர்ந்தோர், தொழில் இழந்தோர் ஆகியோருக்கு இப்போது வழங்கப்பட்டு வரும் நிவாரணம் தொடர்ந்து [illegible] தெரிவித்தார். (ஒ-3)

# தமிழக அமைச்சர் நாஞ்சில் சந்திரசேகருடன் பேச்சு

தமிழக வருவாய்த்துறை அமைச்சர் நாஞ்சில் மனோகரன் நேற்றுப் புதுடில்லியில் பிரதமர் சந்திரசேகரைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

ஏனைய மாநிலங்களிலும் பார்க்க தமிழ் நாட்டில் சட்டம்- ஒழுங்கு நல்ல முறையில் பராமரிக்கப்படுவதாக பிரதமரிடம், நாஞ்சில் மனோகரன் சுட்டிக்காட்டினார்.

உள்நோக்கம் கொண்ட சில சக்திகளே தமிழகத்தில் சட்டம்- ஒழுங்கு சீர்குலைந்து இருப்பதாக குற்றஞ்சாட்டுகின்றன என்று நாஞ்சில் மனோகரன் பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் ஈழப் போராளிகளுக்கு ஊக்கமளித்து, ஒருமைப்பாட்டுக்குக் குந்தகம் விளைவித்தால், அதனை மத்திய அரசு சும்மா பார்த்துக் கொண்டிருக்காது என்று பிரதமர் சந்திரசேகர் நாடாளுமன்றத்தில் பேசிய போது எச்சரிக்கை விடுத்திருந்தார் என்பது தெரிந்ததே.

ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன், துணைப்பிரதமர் தேவிலால், முன்னாள் பிரதமர் வி. பி. சிங் ஆகியோருடனும் திரு மனோகரன் பேச்சுக்கள் நடத்தினார். (ஒ-எ)

# கப்பலில் வந்த பொருள்கள்

'குமண' கப்பலில் 3 ஆயிரத்து 100 மெற்றிக் தொன் உணவுப் பொருள்களுடன், மண்ணெண்ணெய்யும் வந்துள்ளது.

ஆயிரத்து 500 மெற்றிக் தொன் அரிசி, ஆயிரத்து 100 மெற்றிக் தொன் மா, 300 மெற்றிக் தொன் சீனி, 200 மெற்றிக் தொன் பருப்பு மற்றும் 200 பரல் மண்ணெண்ணெய், 24 பரல் டீசல் ஆகியனவே கப்பலில் வந்த பொருள்கள் ஆகும். (உ-எ-5)

# கிழக்குவாழ் தமிழ் மக்களுக்கு...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

அவர்கள் எதுவுமற்றவர்களாக- மரங்களுக்குக் கீழும், மதவுகளுக்கு அடியிலும், படுவான்கரைக் காடுகளிலும்- தங்களது வாழ்க்கையை நடாத்திக் கொண்டிருக்கிறார்கள்.

எட்டி நடந்தால் கிட்டவாக உள்ள, எங்கள் தாயகத்தின் ஒரு பகுதியில், எங்கள் சகோதரர்கள் சிங்களப் பேரினவாதிகளாலும் முஸ்லிம் காடையர்களினாலும் அடித்து விரட்டப்படுகின்றார்கள்.

இவர்கள் ஒரு நேர உணவிற்கே வழியற்று, மாற்று உடைகள் ஏதுமின்றி, உதவிகள் அற்றுத் தவிக்கின்றனர்.

சிங்கள மக்களுக்கு உதவ ஸ்ரீலங்கா அரசு இருக்கின்றது; முஸ்லிம் மக்களுக்கு உதவ ஸ்ரீலங்கா அரசும் அரபு நாடுகளும் இருக்கின்றன; தமிழ் மக்களைப் பொறுத்தவரை நாம்தான் எமக்கு உதவவேண்டும்.

இன்று தென் தமிழீழத்தில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டு விரட்டப்படுகின்றார்கள்.

அப் பகுதியில் மீளக் குடியமர்தல் என்னும் பெயரில் சிங்களக் குடியேற்றம் நடக்கின்றது.

1732 சதுரமைல்கள் பரப்பளவான அம்பாறை மாவட்டத்தில் 1200 சதுரமைல்களை சிங்களவர்கள் ஆக்கிரமித்துவிட்டார்கள்.

அந்த ஆக்கிரமிப்பாளர்களுடன்மோதுவதை விடுத்து, சிங்களப் படைகளுடன் சேர்ந்து, 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ்மக்களை, முஸ்லிம்கள் படுகொலைகள்மூலம் விரட்டி வருகின்றனர்.

தமிழர்களை விரட்டி அப்பகுதிகளை தாங்கள் ஆக்கிரமிக்கலாம் என முஸ்லிம்கள் நினைக்கின்றனர்,

எவ்வளவோ கொடுமைகளை இனப்படுகொலைகளை சந்தித்தும் அந்த மக்கள் விடுதலைப் போராட்டத்தில் மேலும் மேலும் உறுதியாகவே இருக்கின்றார்கள்.

எவ்வளவு இடைஞ்சல்களுக்கு மத்தியிலும் அம் மக்கள் தங்களதுபகுதியின் ஏதோ ஒரு மூலையில் மண்ணைக் கிழறி வாழவே முயற்சிக்கின்றனர்.

அந்த மண்ணை விட்டு அவர்கள் ஓடத் தயாராக இல்லை.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலையில் வாழும் தமிழர்கள் பலரின் குடும்பங்கள் பிரிந்துவிட்டன. கணவனுக்கு மனைவியோடு- பெற்றோருக்கு பிள்ளைகளோடு தொடர்புகள் அற்று, திக்குத் திக்காகப் பிரிந்துவிட்டார்கள்.

பிரிந்தவர்கள் உயிரோடு இருக்கிறார்களா என்பது கூட அவர்களுக்குத் தெரியாது.

எதிர்வரும் மாவீரர் வாரத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறைப்பகுதிகளில் வாழும் எமது சகோதரர்களுக்கு உதவும் வகையில் மற்றைய மாவட்டங்களில் வாழும் தமிழ்மக்களிடமிருந்து உதவிகள் பெற இருக்கின்றோம்.

இது — தமிழீழம் ஒன்றுபட்டு நின்று—ஒரே தலைமையின்கீழ் போராடும் காலம்.

எம்மக்கள் எங்கு பாதிக்கப்பட்டாலும் உதவவேண்டியது எமது கடமையாகும்.

உலகமே திகைத்து வெட்கப்படும் அளவிற்கு நாமே எமது உடன்பிறப்புகளுக்கு உதவ முன்வருவோம்.

எல்லோருமே இப்போரினால் பாதிக்கப்பட்டுத்தான் உள்ளார்கள்; ஆனாலும் அதிக அளவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அந்தளவு பாதிப்பைச் சந்தித்திருக்காத தமிழீழ மக்கள் அனைவரும் உதவ முன்வரவேண்டும்,

வரும் துன்பங்களை அனைவரும் பகிர்ந்துகொள்வோம்; உணவு உடைகளைப் பகிர்ந்துகொள்வோம்; ஒரே தலைமையின்கீழ் ஒரே கொடியின் கீழ் ஒன்றிணைந்து போராடுவோம்.

— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 19 - 11 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org